பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 698 **நாள்: 19.11.2026**

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ரிப்பன் கட்டட அலுவலகத்தில் சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தரை இறங்கும் போதும், மேலே செல்லும் போதும் பறவைகள் பறந்து மோதுவதால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் விதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இன்று (19.11.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில். ரிப்பன் கட்டட அலுவலகத்தில் சென்னை விமான நிலையத்தில் விமானங்கள் தரை இறங்கும் போதும், மேலே செல்லும் போதும் பறவைகள் பறந்து மோதுவதால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் விதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் (Airporat Authority of India) சென்னை பன்னாட்டு விமான நிலைய பொது மேலாளர் திரு. பி.ராஜ்குமார் (செயல்பாடுகள்), மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர்கள் திரு.பாலமுரளி, திரு.பி.சங்கரவேலு மற்றும் விமான நிலையம், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அடையாறு ஆறு மற்றும் அதன் கரையோரங்களில் பறவைகள் நடமாட்டத்தைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் முறையில் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல், கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள நீர்நிலைகளில் பறவைகள் கூடுவதைத் தடுக்கும் விதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி